# திருக்குறளில் காணப்படும் உளவியல் எண்ணக்கருக்கள் ஓர் விபரண ஆய்வு

**[1]நிதுர்ஷா ஜெயக்குமார், [2]ஸ்ரீபிரியங்கா சரவணராஜ், [3]கலாநிதி.க.கஜவிந்தன்**

[1,2,3]சிரேஸ்ர விரிவுரையாளர், மெய்யியல்/உளவியல் துறை, யாழ் பல்கலைக்கழகம்., யாழ்ப்பாணம்

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கியங்கள் காலத்தால் தொன்மை வாய்ந்ததும், ஆழமான கருத்துக்களுடன் அளப்பெரிய பொக்கிஷங்களை தன்னகத்தே கொண்டு, பெருமையும் வலிமையும் பெற்று பல காலக்கட்டங்களை கடந்து வந்துள்ளது. தமிழ் இலக்கியங்கள் தமிழர்களின் வாழ்வியல் பற்றிய கருத்துக்களை சுமந்து வந்த போதிலும், மனித வாழ்வியலை அடிப்படையாக கொண்டு பழந்தமிழ் நூல்களிலே பதினென் கீழ்கணக்கு எனப்படும் பதினெட்டு நூல்களின் வரிசையிலே முப்பால் என்ற பெயரோடு தனிப்பெரும் சிறப்புக்குரிய நூலாக திருக்குறள் அமையப்பெற்றுள்ளது. இதனை உலகுக்களித்த பெருமை திருவள்ளுவப் பெருந்தகையை சாரும். அதன் முக்கியத்துவம் உணர்ந்து பல மொழிகளின் மொழிபெயர்க்கப்பட்டு உலகப் பொதுமறையாக உலகம் முழுவதும் பிரயோக ரீதியாக பயன்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மனிதனின் வாழ்வியலுக்கு அடிப்படையாக மனித நடத்தை விளங்குகின்றது. அந்நடத்தையை அடிப்படையாக கொண்டே மனித வாழ்வியலும் அமையப்பெறுகிறது. அந்தவகையில் மனித நடத்தையை விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தும் உளவியல் ஆனது உள்ளுணர்வு,கவனம்,ஆளுமை,நடத்தை,ஊக்கம்,உணர்ச்சி மற்றும் மூளையின் செயற்பாடுகள் என்பவற்றை அடிப்படை ஆய்வாக கொண்டுள்ளது. எனவே உளவியல் ரீதியான எண்ணக்கருக்கள் எவ்வாறான வகையில் ததும்பி உள்ளது என்பது தொடர்பாக இவ் ஆய்வின் மூலம் ஆராயப்பட்டுள்ளது. எனவே இக்கட்டுரையின் நோக்கமாக அமைவது தமிழர் வாழ்வியல் தொடர்பான கருத்துக்களை இயம்பும் தமிழ் இலக்கியங்களுள் முதன்மையும் சிறப்புக்குரிய நூலான திருக்குறளில் உளவியல் தொடர்பான கருத்துக்கள் எவ்வாறான வகையில் காணப்படுகிறது என்பதை ஆராய்வதாக உள்ளது. விபரண முறை,வரலாற்று முறை போன்ற ஆய்வு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இக்கட்டுரையின் நோக்கமானது சிறப்பாக வெளிக்கொணரப்பட்டுள்ளது.

**திறவுச்சொற்கள்-** திருக்குறள், உளவியல், இலக்கியங்கள்

## ஆய்வு அறிமுகம்

'கடவுள் மனிதனுக்குச் சொன்னது கீதாச்சாரம்,மனிதன் இறைவனுக்குச் சொன்னது திருவாசகம்,மனிதன் மனிதனுக்குச் சொன்னது திருக்குறள்' என்ற பெருமைக்குரிய திருக்குறளை பூக்களை தொடுப்பது போல வார்த்தைகளை தேர்ந்தெடுத்து தமிழ் அன்னைக்காய் சூட்டிய ஓர் அழகிய இலக்கிய மாலையாய் வள்ளுவ பெருந்தகை வடிவமைத்துள்ளார்.

வாழ்வியலை அடிப்படையாக கொண்டதும் வாழ்க்கைக்கான அடிப்படைக் கருத்துக்களை இயம்பும் தமிழ் சிறப்பு பெற்ற நூல்களுள் முதன்மையான இந்நூல் மனித வாழ்வின் முக்கிய அங்கங்களாகிய அறம்,பொருள்,இன்பம்,வீடு ஆகியவற்றை விளக்குகிறது. அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் 380 குறட்பாக்களையும், பொருட்பால் 70 அதிகாரங்களையும் 700 குறட்பாக்களையும், காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் 250 குறட்பாக்களையும் கொண்டமைந்துள்ளது. முப்பால் என்ற முதல் பெயர் கொண்டு இவ்விரண்டு அடிகளால் வெண்பாக்கள் அமைப்பில் எல்லாமாக 133 அதிகாரங்களையும் 1330 குறட்பாக்களையும் உள்ளடக்கியது. உலகப்

பொதுமறையாக பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டதாகவும் 1812 ஆம் ஆண்டு முதன்முதலில் அச்சிடப்பட்ட நூலாகவும் விளங்குகிறது.திருக்குறள் பற்றி கு.அழகர்சாமி குறிப்பிடுங்கால் குறு வடிவில் மறைப்பொருட் கவிதையாக்கத்திலும், (Gronic poetry)திருக்குறள் அதனது கட்டமைப்பிலும் கருத்தாக்கத்திலும்,செயலாக்கத் திறனிலம் இப்படி மாதிரி எழுதப்பட்டதிலே மகத்தானது(thiruvalluvar ‘s kural is the greatest in plan, conception and force of execution ever written in this kind)என்கிறார்.

உளவியல் என்ற அடிப்படையில் நோக்கும் போது மனித நடத்தையை விஞ்ஞான ரீதியாக ஆய்வுக்கு உட்படுத்தும் கற்கை நெறியாக உளவியல் காணப்படுகிறது. கிரேக்கச் சொல்லில் இருந்து உருவான உளவியலானது உளம்+இயல் என இரு பதங்களை கொண்டு பொருள் தருகிறது அதாவது மனிதனின் மனம் தொடரபான விடயங்களை கற்கும் ஒரு கலை என குறிப்பிடலாம். உளவியலானது கல்வி ,குடும்பம், தொழில் உள்ளிட்ட பல்வேறு வாழ்வியல் அம்சங்களை ஆய்வு செய்வதுடன் அவற்றால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் வழங்குகிறது. இத் துறையில் தேர்ச்சி பெற்ற உளவியலாளர்கள் தனிமனிதனின் புலன் உணர்வு, அறிவாற்றல், செயல்திறன், ஆளுமை, நடத்தை என்பவற்றை ஆய்வு செய்கின்றனர். அந்நடத்தையை அடிப்படையாக கொண்டே மனித வாழ்கை நெறி முறைகளும் அமையப்பெறுகிறது.வாழ்வியலை அடிப்படையாகவும் ,வாழ்வியலுடன் இணைந்த பல கருத்துக்களையும் இயம்புகின்ற திருக்குறளில் உளவியல் ரீதியாக பல்வேறு எண்ணக்கருக்களை உளவியலாளர்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், உளவியல் கொள்கைகள் ஊடாகவும் விளக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே திருக்குறளில் உள்ள உளவியலுக்கு இணக்கமானதும் அதனுடன் தொடர்புடைய எண்ணக்கருக்களை இனம் காணும் ஓர் உளவியல் நோக்கில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

இவ் ஆய்வின் நோக்கமாக அமைவது தமிழர் வாழ்வியல் தொடர்பான கருத்துக்களை இயம்பும் தமிழ் இலக்கியங்களுள் முதன்மையும் சிறப்புக்குரிய நூலான திருக்குறளில் கூறப்படும் உளவியல் எண்ணக்கருக்களை இனம்கண்டு அவற்றை விளக்குவதாக உள்ளது.

**ஆய்வின் வரையறை**

வாழ்வியல் தொடர்பான கருத்துக்களை இயம்பக்கூடிய வகையில் பல்வேறு இலக்கியங்கள் காணப்பட்டாலும் அவற்றுள் வாழ்வியல் நூல் என்று சிறப்பித்து கூறப்படக்கூடிய, மனித வாழ்க்கைக்கு அவசியமான பல்வேறு நெறிமுறைகளை இயம்புகின்ற தனித்துவம் கொண்ட திருக்குறள் மாத்திரம் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றில் காணப்படக்கூடிய உளவியல் எண்ணக்கருக்கள் மட்டும் ஆராயப்பட்டமை இவ் ஆய்வின் வரையறையாக அமைகிறது.

**ஆய்வு முறையியல்**

திருக்குறளில் காணப்படக்கூடிய உளவியல் எண்ணக்கருக்கள் தொடர்பான விளக்கங்களை பெற்றுக் கொள்வதற்காகவும், அவற்றை பகுப்பாய்வு செய்வதற்காகவும், திருக்குறள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவும், வரலாற்றியல் ஆய்வு முறையியலும் அவை தொடர்பான விபரிப்புக்களை முன்வைப்பதற்கும் விபரண முறையும் இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

1. **'திருக்குறளில் அறம்'** என்ற தலைப்பில் கு.அழகர் சாமி அவர்களால் 2012 june 18 ஆம் திகதி இவ் ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டது. அனுபவ அணுகுமுறை இவ் ஆய்விற்கென பயன்படுத்தப்பட்டது. இக்கட்டுரையின் நோக்கமாக அமைவது திருக்குறளில் அறத்தை வாசிக்குங் கால் ஒருங்கிணைந்த கட்டமைப்பு அணுகுமுறையை வலியுருத்துவதே.முடிவாக திருக்குறள் ஒரு ஒருங்கிணைந்த தத்துவார்த்தத்தில்அணுகினால்,அதனது படைப்பாக்கத்தில் நாம் அடையும் வாசிப்பு அனுபவத்திற்கும் ஈடு இணையில்லை என்று குறிப்பிடப்படுகிறது.
2. **'திருக்குறள் உணர்த்தும் கல்விச் சிந்தனைகள்'** என்ற ஆய்வானது க.ஜெனிபர் என்பவரால் 2010 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. பதினென்கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளில் காணப்படும் கல்விச்சிந்தனைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.முடிவாக கல்வி என்பதன் பொருளை அறிய முடிகிறது,குற்றம் இல்லாமல் நூலைக்கல்,கற்றவரின் சிறப்பு அறியப்படுகிறது.கல்வி ஏழு பிறவிகளிலும் துணை நிற்கும் முதலியவற்றை விளக்குகிறது.
3. **'திருக்குறள் காட்டும் தமிழர் சமுதாயம்'**என்ற தலைப்பில் தி. தாமரைச்செல்வி என்பவரால் உருவாக்கப்பட்டது. நோக்கமாக சமூகவியல் அறிஞர்கள் சுட்டும்,குடும்பம்,அரசு என்ற நிறுவனங்களை பற்றி முழுமையாக குறள்வழி அறிந்துக்கொள்வதையே நோக்கமாக கொண்டுள்ளது.

**பகுப்பாய்வு**

**திருக்குறள்:** இன்று உலகம் முழுவதும் மக்கள் கைகளிலும் மனங்களிலும் தவழும் நூலாகக் காணப்படுகின்றது. திருக்குறள் கற்றோர் யாரும் தடம் மாறிப் போனதில்லை. சங்க மருவிய காலம் கண்ட உன்னத நூலாக திருக்குறள் அமைகின்றது. அத்துடன் வள்ளுவப் பெருந்தகையின் பெருமையை எடுத்துரைக்கும் அளவிற்கு அடியேன் அத்துனை பெரியோனும் இல்லை. திருக்குறளிலே பல அதிகாரங்களில் **உளவியல்(Psychology)** கருத்துக்கள் வேரோடிச் சென்றிருப்பதனை காண முடிகின்றது. உளவியலில் கூறப்படும் எண்ணக்கருக்கள் திருக்குறளிலும் காண முடிவது சிறப்பிற்குரியது எனலாம். தமிழரின் வாழ்வியல் நெறிமுறைகளை சிறப்பாக எடுத்தியம்பும் இந்நூல், ஆங்காங்கே சில உளவியல் எண்ணக்கருக்களையும்(Psychological concepts) பற்றி குறிப்பிட்டுள்ளது என்றே கூற வேண்டும்.

வாழ்வியல் என்னும் போது அதில் உளவியல் என்ற பரப்பும் கவனத்திற்குரியதே. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்ற இம் மேலைத்தேய உளவியலில், வாழ்வியல் சார் விடயங்கள் பல விஞ்ஞான ரீதியில் ஆராயப்பட்டும், முடிவுகள் முன்வைக்கப்பட்டும் வருகின்றன. ஆனால் தமிழ் இலக்கியங்களான திருக்குறள் போன்றவற்றில் உளவியல் எண்ணக்கருக்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னேயே எடுத்துரையப்பட்டு விட்டன என்பது உண்மை.

தமிழர் வாழ்வியல் என்னும் போது பல நாகரீகம், பண்பாடுகளை கண்டறிந்து அதன்படி வாழ்ந்த மரபாக கருதலாம். தமிழர் தம் வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்தியம்புவது என்பது அவ்வளவு எளிதானதல்ல. ஆனாலும் எம் செம்மொழி கண்ட இலக்கியங்கள் பலவற்றிலிருந்து தமிழரின் வாழ்வியலினை அறிய முடிகின்றது. அத்தகைய இலக்கியங்களுள் ஒன்றே திருக்குறளுமாகும். மனிதன் வாழ்வாங்கு வாழத் தேவையான அறக் கருத்துக்கள் பல திருக்குறளிள் புதைந்துள்ளன. அதனடிப்படையில் திருக்குறள் காட்டுகின்ற உளவியல் எண்ணக்கருக்களினை கண்டறிந்து அவற்றினை பறைச்சாற்றுவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

உளவியல் என்பது என்ன? என நோக்குமிடத்து, **'மனித நடத்தைகளை விஞ்ஞான ரீதியில் ஆராயும் துறை எனக் கொள்ள முடியும்.'(1)** இன்று உளவியல் தடம் பதித்துள்ள இடங்கள் பல. குறிப்பாக கற்றல், கற்பித்தல் தொட்டு நிறுவனம், சூழல் என பல தளங்களிலும் உளவியல் சார் ஆய்வுகள் நடந்தேறிய வண்ணமே உள்ளது எனலாம். விஞ்ஞான ரீதியில் எல்லா விடயங்களையும் அணுகும் ஓர் தனித் துறையாக உளவியல் வளர்ச்சிக் கண்டுள்ளது. உளவியல் என்பதற்குரிய வரலாறு மெய்யில் அறிஞ்ஞர்கள் தோற்றம் பெற்ற காலத்திலிருந்து ஆரம்பிக்கின்றது. வில்ஹிம் வூண்ட்(Wilhelm Wundt) லிப்சிங் பல்கலைக்கழகத்தில்(Lapsing University) பிசோதனை உளவியல் கூடத்தினை ஆரம்பித்தது தொடக்கம் உளவியல் ரீதியான விஞ்ஞான வளர்ச்சி ஆரம்பமானது.

திருக்குறள் பற்றிய போதுமான விளக்கம் யாவருக்கும் உண்டு. என்றபடியால் சுருக்கமான விளக்கத்தினை அளிக்கலாம் என எண்ணுகின்றேன். மூன்று பால்களை மையப்படுத்தியுள்ளது. (அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால்) 1330 குறட்பாக்களையும் தெளிவான விளக்கவுரையையும் கொண்டிருக்கின்றது. அத்துடன் 133 அதிகாரங்களையும் கொண்ட ஈறடிப் பாடல்களை உள்ளடக்கியுள்ளது. தமிழ் அரிச்சுவடியில் **'அ'** தொட்டு **'ன்'** இல் குறள்கள் முடிவடைவது மேலுமொரு சிறப்பம்சமாகும். இவ்வாறு திருக்குறளின் சிறப்பினை சொல்லிக் கொண்டே போகலாம்.

'திருக்குறள் மனித வாழ்க்கைக்கே உரியது.'நடத்தை, ஆளுமை, பிறழ்நிலை என மனிதனின் பல்வேறுப்பட்ட உளவியல்புகளை எடுத்துரைக்கின்றது குறள். மனம், ஒன்றினை எண்ணி அதன் வழியே மனிதர்களை இயக்கியாய் செலுத்துகிறது. மனிதனின் ஒவ்வோர் அணுவிலும் மனம் தன் ஆதிக்கத்தினை செலுத்துகின்றது.

**'படைக்கொண்டார் நெஞ்சம் போல் நன்றுக்கா தொன்றான்**

**உடல் சுவை உண்டார் மனம்'(2)** என்ற குறள் இதற்கு அடிக்கோலுகின்றது. இங்கே உளவியலின் அடிப்படை எண்ணக்கருவினை திருக்குறள் வலியுறுத்துகின்றது.

மனித வாழ்விற்கு அடிப்படையானதும், மனிதனை இயக்கிக் கொண்டிருப்பதும் மனமே. மனம் பற்றிய வள்ளுவப் பெருந்தகையின் பார்வை கவனத்திற்குரியது. மனம் தான் வாழ்வின் ஏணிப்படி, மனம் எதனை நோக்கிப் பயணிக்கின்றதோ அவ்வழியே மனிதனும் தன் வாழ்வினை நகர்த்திச் செல்கின்றான். குறட்பாக்களின் பல இடங்களில் மனம் பற்றிய விளக்கம் அவதானத்திற்குரியது.

உளவியல் எண்ணக்கருக்களில் எண்ணங்கள்(Thoughts) என்பது முக்கிய இடம் பெறுகின்றன. அறிகை உளவியலாளர்கள்(Cognitive Psychologists) எண்ணங்கள் பற்றி பல விளக்கங்களை அளித்துள்ளனர். எனவே எண்ணங்கள் என்பது அறிகை(Cognitive) சார் எண்ணக்கருவாகும். எண்ணங்கள் தூய்மையாக இருக்கும் போது மனிதரின் நடத்தையும் சீரானதாக அமையும் என்பது உளவியல் நோக்கு. **'புலன்கள் தூண்டப்பட்டு நரம்பு வழியாக மூளைக்கு செய்திகள் கடத்தப்படுகின்றன. இவை பின் எண்ணங்களாக உருவெடுக்கின்றன.'(3)** வள்ளுவர் எண்ணங்கள் தொடர்பாகக் குறிப்பிடும் போது எண்ணங்கள் தான் உலகினை ஆளுவதற்கு காரணமாக அமைகின்றன. அவ்வெண்ணங்கள் சிறப்பானதாக அமையும் போது மனிதரிடையே வெற்றிகளும் குவிகின்றன.

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்**

**திண்ணியர் ஆகப் பெறின்'(4)** என்ற குறட்பாவினை உதாரணம் காட்ட முடியும்.

மனம் என்பதனை தொல்காப்பியத்தில் ஆறாவது அறிவாக கருதுகின்றனர். இதனை **'ஆறறிவதுவே அவற்றொடு மனனே' (தொல்-1526). (5)** என்ற பாடலடி விளக்குகின்றது. மனிதன் உலகில் எல்லா விடயங்களையும் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடுகின்றான், இல்லை கொண்டு வந்து விட்டான் என்றே கூற வேண்டும். ஆனால் அவனுள் கலந்து அவனையே ஆட்டிப் படைக்கும் மனதினை அவனால் கட்டுக்குள் கொண்டு வர முடிவதில்லை என்றால் அது அதிசயிக்கத்தக்கதாகும். மனதில் ஏற்படும் பல கீரல்கள் அவனை நோய்வாய்ப் படச் செய்கின்றது. இதனை உளவியல் பார்வையில் 'பித்துநிலை'(Mania) எனக் குறிப்பிட முடியும். எனவே உடலில் ஏற்படக்கூடிய நோய்களைவிட மனதில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களே அதிக ஆபத்தானவை. மனதில் ஏற்படும் பாதிப்பு கூடவே உடலியல் சார் நோய்களையும் ஏற்படுத்தி விடுகின்றது. அதனை மையப்படுத்தியே வள்ளுவர் மனம் தொடர்பான குறட்பாக்களை வடிவமைத்திருப்பார் என எண்ணத் தோன்றுகின்றது.

எனவே மனதினை தூய்மைப்படுத்துவது அவசியம். அது வாழ்வியலை உயர்த்தும் என்பது திருக்குறள் தந்த உன்னத கருத்தாகும்.

**'மனநலத்தின் ஆகும் மறுமை மற்றுஅ.்.தும்**

**இனநலத்தின் ஏமாப்பு உடைத்து'(6)** எனவும்

**'மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம் இனநலம்**

**எல்லா புகழும் தரும்'(7)** எனவும் வள்ளுவர் விபரித்துள்ளமையை சுட்டிக்காட்ட முடியும். மனம் பற்றிய 11 குறட்பாக்கள் வடிவமைக்கப்பட்டிருப்பது குறிப்பிட்டு கூறப்பட வேண்டிய ஒன்றாகும்.

மனவெழுச்சி(Emotions), உளவியலாளர்களின் பார்வையில் ஓர் ஊக்கியாக அமைகின்றது. மனிதர்களிடையே நேரான மற்றும் எதிரான மனவெழுச்சிகள் தோன்றுகின்றன. ஆரோக்கியமான மனவெழுச்சி நல்ல நடத்தைக்கு ஆதாரமாகின்றது. அதீத மனவெழுச்சி தூண்டலானது பல சமூக விரோத செயல்களுக்கு காரணமாகின்றன. உதாரணமாக, களவு, கொலை, கற்பழிப்பு என்பன. அதாவது அதீத பாலியல் மனவெழுச்சித் தூண்டலானது கற்பழிப்பு போன்றவற்றிற்கு காரணமாகின்றன. திருக்குறள் கூறுகின்ற மனவெழுச்சி பற்றிய கருத்தானது, அதிக மனவெழுச்சி தோல்வியை உண்டுப் பண்ணும் என்பதாகும். இதனை பின்வரும் குறட்பா எடுத்துரைக்கின்றது.

**'உடைந்தம் வலி அறிவார் ஊக்கத்தின் ஊக்கி**

**இடைக்கண் முரிந்தார் பலர்'(8)**

உளவியலில் ஊக்கம்(Motivation) தொடர்பான பல கொள்கைகள் எழுந்ததுண்டு. மாஸ்லோவின்(Abraham Maslow) தேவைப்படிநிலைக் கொள்கை(Need theory) ஊக்கம் பற்றிய பிரசித்தி வாய்ந்த கொள்கையயாகும். இது ஊக்கத்தின் அவசியத்தினை வலியுறுத்துகின்றன. 'உள்ளிருந்து இயக்கும் சக்தி ஊக்கம்'' என கருத முடியும். ஊக்கம் ஒருவனை உந்துகின்ற போது தான் அவனால் அக்காரியத்தினை நிறைவேற்ற முடியும். நிறுவன மட்டத்தில், கற்றல் செயற்பாடுகளில் இவ்வூக்கம் நேரான மட்டத்தில் இருப்பது தொடர்பான விளக்கங்கள் உளவியலில் விபரிக்கப்பட்டுள்ளது.

ஊக்கம் தொடர்பாக மேலைத்தேய உளவியளாளர்கள் குறிப்பிடுவதற்கு முன்பே சங்கமருவிய காலத்தின் பொக்கிஷமான திருக்குறள் எடுத்தியம்பிவிட்டது. 'ஊக்கமுடைமை' அதிகாரத்தின் குறட்பாக்கள் இதற்கு நற்றாதாரங்களாகும். 'ஊக்கம் உடைமையே உடையவர்' சொல்லப்படும் சிறப்பிற்குரியவர்கள், ஊக்கமுடைமையே ஒருவனுக்கான நிலையான செல்வம், ஊக்கமுடைமை செல்வத்திற்கு வலிகோலும், மனதில் ஊக்கமுள்ள அளவிற்கு உயர்வும் ஏற்படும்.

**'உடையார் எனப்படுவது ஊக்கம் அ.்.து இல்லார்**

**உடையது உடையரோ மற்று'(9)** மற்றும்

**'ஆக்கம் இழந்தோம் என்று அல்லாவார் ஊக்கம்**

**ஒருவந்தம் கைத்து உடையார்'(10)** போன்ற குறட்பாக்கள் அதனை நிருபிப்பனவாக அமைகின்றன. எனவே உளவியலாளர்கள் குறிப்பிடுகின்ற ஊக்கம் பற்றிய கருத்துக்கள் சில திருக்குறளிலும் காணக்கூடியதாக உள்ளது.

திருக்குறளில் குறிப்பிடப்பட்ட 'கனவு' தொடர்பான பார்வை, உளவியல் சார் எண்ணக்கருக்களில் முக்கியமானவை. காள்ர் யுங்(Carl Jung), சிக்மன்ட் பிரொய்ட்(Sigmund Freud) உள்ளிட்ட பலர் கனவு நிலை தொடர்பான பல உளவியல் விளக்கங்களை கூறியுள்ளனர். தொன்ம வகைப்பாட்டிற்குள் காள் யுங் கனவுநிலைத் தொடர்பான வியத்தகு உளவியல் சார் எண்ணக்கருக்களை முன்வைத்தார். தோன்றக் கூடிய கனவுகளுக்கான உளவியல் விளக்கங்கள் இவரால் கூறப்பட்டன.

**'நனவில் நல்காரை நோவர் கனவினால்**

**காதலர்க் காணாதவர்'(11)** என்ற குறள் மூலம் அறிவது யாதெனின், திருக்குறளிலே 'கனவு நிலைத் உரைத்தல்'என்ற அதிகாரம் கனவு என்ற விடயத்தினை அணுகியுள்ளது என்பதனையாகும்.

காமத்துப்பால், பாலியல் சார் விடயங்களுக்கு முக்கயத்தும் வழங்கிய பாலாகும். புணர்ச்சி, காதல் போன்ற பல விடயங்களை ஈறடிப் பாடலில் விளக்கியுள்ளார். உளவியலாளர்களில் சிக்மன்ட் பிரொய்ட் என்பவர் பாலியல் கருத்துக்களுக்கு முதன்மையளித்துள்ளதுடன், உளப் பாலியல் விருத்திப் பருவங்களை கொண்டு தன் கொள்கையினை உருவாக்கினார். எனவே பாலியல் என்பது ஆழ் மனதில் அடக்கப்பட்ட லிபிடோ(Libido) சக்தியாக வெளிப்படும் என்பது இவரின் கருத்தாகும்.

அதனடிப்படையில் திருக்குறளிலும், உளவியலில் குறிப்பிட்டது போல பாலியல் சார் கருத்துக்களை காண முடிகின்றது. 'புணர்ச்சி விதும்பல்', நெஞ்சோடு கிளத்தல்','நெங்சோடு புலத்தல்' என்ற அதிகாரங்களில் பெரும்பாலான குறட்பாக்களில் பாலியல் எண்ணக்கரு மேலோங்கிக் கிடப்பதனை காண இயலுகின்றது.

**'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்**

**கள்ளுக்குஇல் காமத்திற்கு உண்டு'(12)** இக் குறளினை உதாரணம் காட்ட முடியும்.

ஆளுமைப் பண்புகளில்(Personality Traits) புறமுகப் பண்பாளர்களின்(Extraversion) குணவியல்புகளான நட்பு பகிர்தல், அஞ்சாமை, பிறரிடம் எளிதில் பழகுதல், சுறுசுறுப்பு போன்றன திருக்குறளில் ஆங்காங்கே சில குறட்பாக்களில் குறிப்பிடப்படுகின்றன. இவை உளவியளாளர்கள்

குறிப்பிட்ட புறமுகிப் பண்பாளர்களின் குணவியல்புகளை ஒத்ததாக அமைவதுடன், ஆளுமைப் பண்புகளில் புறமுகிப் பண்புடையோர் சிறப்பித்துக் கூறப்படுகின்றனர்.

**‘எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மட்டும்**

**பண்புடைமை என்னும் வழக்கு’(13)** என்ற குறளில் எவரிடத்திலும் எளிமையாக பழகும் பண்புடைமை சிறப்பித்துக் காட்டப்பட்டுள்ளது.

உளவியலில் பல உளக் கோளாறுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. மற்றும் சிகிச்சை முறைமைகள், நுட்ப முறைமைகள் என்பனவும் விளக்கப்படுகின்றன. பொதுவாக ஏற்படக்கூடிய உளப்பிரச்சினைகளாக அச்ச நோய்(Phobia), பதகளிப்பு(Anxiety) என்பன காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் சமூகத்திற்கு, அவையோர்க்கு அஞ்சல் மற்றும் பரீட்சையின் போதான பதகளிப்பு என ஏற்படக் கூடும். இது தொடர்பான அறிகுறிகள் உளவியல் புலத்தில் நன்கு அலசி ஆராயப்படுவனவாகக் காணப்படுகின்றது. ஆனால் திருக்குறளில் ‘அவை அஞ்ஞாமை’ என்ற அதிகாரத்தில் சபைக்கு அஞ்சுவோரின் குணப்பண்புகள் பல காலங்களுக்கு முன்பே குறிப்பிடப்பட்டு விட்டன எனலாம். இது போன்ற அதிகாரங்கள் உளப்பிரச்சினைகளான மேற்குறிப்பிட்டவற்றினை மேலோட்டமாக தொட்டு சென்றுள்ளனவோ என எண்ணலாம்.

உற்று நோக்குகின்ற போது உளவியலின் சிகிச்சை சார் நுட்ப முறைகளில் ‘உளவளத்துணை’(Counseling) என்பது இன்றைய காலகட்டத்தில் பெருவாரியாகக் கையாளப்பட்டு வருகின்ற ஒன்று, ஆற்றுப்படுத்தலின் சாயலினை கொண்ட உளவளத்துணை என்பது **‘துணைநாடி தன் திறன்களை தானே அறியச் செய்வதன் மூலம் அவரின் பிரச்சினைக்கான தீர்வினை தானாகவே அணுக வழிக்காட்டுதல்’** எனலாம். அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்ற உளவியலில் கையாளப்படும் இவ் நுட்ப முறைமைகள், 2000 ஆண்டுகளிற்கு முன்பே திருக்குறள் மூலம் மறைமுகமாக மக்களுக்கு ஆற்றுப்படுத்தல் நுட்ப முறைகள் விளக்கப்பட்டு விட்டன. என்பதற்கு அப்பால் பல வழிகளில் திருக்குறளில் 1330 குறட்பாக்களும் ஆற்றப்படுத்தல் என்ற சேவையை செய்துள்ளது எனலாம். இதனாலேயே முனைவர் திரு வெங்கடாசலம் அவர்கள் ‘திருக்குள் ஒரு சுமையான ஆற்றப்படுத்தும் மனநூல்’ என தன் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

உளவியலில் குறிப்பாக சமூக உளவியல் புலத்திலே ‘மனப்பாங்கு’ (attitude)என்ற எண்ணக்கரு அதிகம் பேசப்படும் ஒன்றாக காணப்படுகிறது. **‘மனப்பாங்கு என்பது எம் வாழ்க்கையில் எதிர்கொள்பவற்றை நாம் மதிப்பீடு செய்ய நாம் அறிந்துக் கொண்ட சார்புநிலைப்பதமாகும்.இவை நாம் சந்திக்கும் மனிதர்கள் ,பிரச்சினைகள்,பொருட்கள்,நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கயுள்ளது’(14)** அப்படிப்பட்ட மதிப்பீடு நேர்மறையானதாகவும் இருக்கலாம் அல்லது எதிர்மறையானதாகவும் இருக்கலாம்.ஆனால் அந்த மதிப்பீடுகள் நேரத்திற்கு நேரம் வித்தியாசமானதாக இருக்கலாம்.(attitude as a learned tendency to evaluate things in a certain way. this can include evaluation are often positive or negative.but they can also be uncertain at times.)என கருதப்படும் இதனுடன் தொடர்புடைய மனப்பான்மை பற்றியதான சில குறள்களை திருக்குறளில் காணமுடிகின்றமை சிறப்புக்குரியதாகும். உதாரணமாக

**‘எப்பொருள் எத்தன்மை ஆயினும்**

**அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு’(15)**

அதாவது எப்பொருள் எத்தன்மையானதாக தோன்றினாலும் (மனப்பான்மை) அத்தோற்றத்தை மட்டும் கண் மயக்காமல் அப்பொருளில் மெய்மையான இயலை தெளிவாக காண்பதே அறிவு எனப் பொருள் கொள்ளலாம். இதனை உளவியல் கூறும் மனப்பான்மை என்ற எண்ணக்கருவுடன் ஒப்பிட முடியும்.

கடப்பு உளவியலாகட்டும்(Para Psychology),அல்லது இந்திய உளவியலாகட்டும்(Indian Psychology) இவற்றில் மறுபிறப்பு என்பது தொடர்பான பல ஆய்வுகளும் பல அதிசயிக்கும் முடிவுகளும் உளவியலாளர்களினால் முன்வைக்கப்பட்டன. உளவியல் நோக்கில் ஆன்மா அழிவற்றது, இறந்த பின் உடல் மட்டுமே மக்கிப்போகும்,ஆன்மாவிற்கு அழிவில்லை எனலாம். இதன்படி நோக்குமிடத்து எதிலும் பற்றற்றவர்கள் பிறவியற்றவர்கள் ஆவர் ஆசைக்கு அடிமையானவர்களுக்கு பிறவியிலிருந்து விடுதலை இல்லை என்கிறது. குறள் அதாவது

**'அற்றவர் என்பார் அவா அற்றார்**

**மற்றையார் அற்றாக அற்றது இலர்'(16)**

என்ற குறள் இதற்கு சான்றாக அமைகிறது. இந்திய உளவியலிலே மறுபிறப்பு என்பது ஆன்மாக்கள் தாங்கள் செய்த பாவ புண்ணியங்களின் பயனாக பிறவிகள் பல எடுத்து அப்பிறவியில் பிறவிப்பயனை அனுபவித்த பின்னர் மற்றொரு பிறவியை எடுத்தல் 'புல்லாகி பூடாகி புழவாய் மரமாகி'என்ற வரியை சான்றாக குறிப்பிடலாம்.

திருக்குறளில், இந்திய உளவியவியலியலே குறிப்பிட்ட முக்திநிலை,மெய்ப்பொருளை காண்பது போன்ற விடயங்கள் இடையிடையே குறிப்பிடப்பட்டுள்ளது 'பிறப்பெண்ணும் பேதைமை நீங்க' என்ற குறள் முலம் அதாவது அஞ்ஞானம் அகலும் போது முக்தி என்ற சிறந்த நிலைமை ஏற்படும் என அறியலாம்.

திருக்குறளில் கூறப்பட்ட அறக்கருத்துக்களை அடிப்படையாக கொண்டு நோக்கமிடத்து மொத்தத்தில் எச் செயலினையும் எண்ணத்தினையும் ஒருவன் தன் ஆன்மாவினை உலகம் புகுவதற்கு தகுதியடையும் வண்ணம் செம்மைப்படுத்துவதற்கு உறுதுணையாக அமைத்துக் கொள்வது உயர்ந்த மன நலத்தின் அடையாளம் என விளக்குகின்றது. இத்தகைய

மனநலத்துடன் வாழ்தல் என்பது உளவியலில் மிகப் பெரிய புள்ளி. இதற்காக பல துறைகளிலும், தளங்களிலும் உளவியலாளர்கள் பணியாற்றி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது. திருக்குறளில் மனநலத்துடன் வாழ்தல் என்பதனை அறவழியில் வாழ்தல் என விளக்குகின்றது. அதற்கேற்றாற் போல பல உளவியல் எண்ணக்கருக்களையும் புகுத்தி திறம்பட அமைத்துள்ளார் திருவள்ளுவர்.

முழுநிலைக்காட்சிக் கொள்கையாளர்கள் (Gestalt Psychologist) குறிப்பிட்ட 'மாயை', 'சாயல்' போன்ற எண்ணக்கருக்கள் திருக்குறளில் மிதந்து சென்றிருப்பது உண்மை. அதாவது, இருளில் கிடக்கும் கயிற்றினை பாம்பெனக் கண்டு அஞ்சவதுண்டு. (பிரதி விம்ப வாதம்) அது போன்ற புலக்காட்சி பற்றியதான கருத்துக்களை வாழ்வியலுடன் பொருத்தி பல இடங்களில் பேசியுள்ளார் வள்ளுவர். 'மெய்யுணர்தல்' என்ற அதிகார குறட்பாக்களில் இதனை காண முடிகின்றது.

எனவே நிறைவாக நோக்குமிடத்து, திருவள்ளுவரும் உளவியலுடன் தொடர்புடைய பல விடயங்களை முன்வைத்துள்ளார்.

**நிறைவுரை**

யதார்த்தமான சிந்தனைகளுடன் வாழ்வியல் நெறிமுறைகளை மேம்படுத்தும் நோக்குடன் திருக்கறள் எழுதப்பட்டது. திருக்குறளின் ஈறடிப் பாடல்கள் ஒவ்வொன்றும் மனிதரை முன்னேரச் செய்யும் துடுப்பாக அமைகின்றன. உளவியல் எண்ணக்கருக்கள் மனநலத்துடன் வாழ்தல் என்பதற்கு அப்பால் நன்நடத்தையை தோற்றுவிப்பதில் பாரிய செல்வாக்கினை செலுத்துகின்றது எனலாம். உளவியல் சார் அய்வுகளை முடிவுகளின் மூலம் பெறப்பட்ட ஒவ்வோர் விடயமும் ஆழ்ந்து நோக்கத்தக்கவை. ஆப்படிப்பட்ட உளவியல் எண்ணக்கரக்களை திருக்கறளில் காணமுடிகின்றது. எனவே நல்ல குறிக்கோள் மிக்க வாழ்வினை வாழ வள்ளுவர் கூறிய விடயங்களில் காணப்படும் உளவியல் விடயங்களையும் சற்றே அராய்ந்து நோக்க வேண்டும். உளவியல் எண்ணக்கருக்கள் நிறைந்து காணப்படும் இத்தகைய ஒப்பற்ற நூலை தந்த வள்ளுவப் பெருந்தகை இன்றும் எம்முடன் வாழ்ந்துக் கொண்டு தான் இருக்கின்றார். செம்மொழியாம் தமிழ் கொண்ட தமிழரின் வாழ்வியலை இதன் துணைக் கொண்டு மேலோங்கச் செய்வோம்.

**அடிக்குறிப்புக்கள்**

1. James W. Kalat., ‘Introduction to psychology’., MPS limited Publication., 2015.,பக்கம் 11.
2. ஆச்சார்யா.பி.எஸ்.இ.,’திருக்குறள்’.,நர்மதா பதிப்பகம், சென்னை 600 015., 2006., பக்கம் 192.
3. Robert.J.Sternberg., Karin Sternberg.,’Cognitive Psychology-7th edition’.,Conveo publisher.,2015.,பக்கம் 08.
4. ஆச்சார்யா.பி.எஸ்.இ.,’திருக்குறள்’.,நர்மதா பதிப்பகம், சென்னை 600 015., 2006., பக்கம் 399.
5. முனைவர்.ஆனந்தநாயகி.ப.,’தொல்காப்பியத்தில் உளவியல் கோட்காடுகள்’.,2015.பெப்ரவரி 14.
6. ஆச்சார்யா.பி.எஸ்.இ.,’திருக்குறள்’.,நர்மதா பதிப்பகம், சென்னை 600 015., 2006., பக்கம் 296.
7. மேலது., பக்கம் 295.
8. மேலது., பக்கம் 303.
9. மேலது., பக்கம் 362.
10. மேலது., பக்கம் 363.
11. மேலது., பக்கம் 677.
12. மேலது., பக்கம் 708.
13. மேலது., பக்கம் 562.
14. https;//veltharma.blogspoy.com// மனப்பாங்கு
15. மேலது., பக்கம் 243.
16. மேலது., பக்கம் 248.

**உசாத்துணை நூல்கள்**


1) 2015 நவம்பர் 11.,’திருக்குறளின் சிறப்புக்கள”.,https://eluthu.com>kavithai
2) 2010செப்டெம்பர்.,’திருக்குறள்சிறப்புக்கள”: selvamperumal.blogspot.com>2010/ 09
3) 2015ஒக்டோம்பர்10.,’உளவியல்ஆலோசணைகள்’https;//newpsychologyadvice.blogspot.com
4) 2010 உளவியல்கவிமலர்செய்திகள்:https;//kavimalar.dinamalar.com>news
5) James W. Kalat.,’Introduction to psychology’., MPS limited Publication., 2015.
6) ஆச்சார்யா.பி.எஸ்.இ.,’திருக்குறள்’.,நர்மதா பதிப்பகம், சென்னை 600 015., 2006.